# மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்

**பொருள் எண்: 1**

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2024 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்: 2**

வடலூர் நகராட்சி வார்டு எண்.22, குறிஞ்சி தெரு (முல்லை நகர்) மூன்று மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு தெரு மின் விளக்குகள் பொருத்துவதற்கான மின்கம்பி இல்லை. எனவே, மின்கம்பி அமைக்கவும் மற்றும் தெரு மின்விளக்குகள் பொருத்துவதற்கு கட்டண விவரம் தெரிவிக்கமாறு இவ்வலுவலக கடித ந.க.எண்.1067/2023/இ1, நாள்.03.10.2023ல் இளமின் பொறியாளர் மின்சாரவாரியம் வடலூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் ரூ.64320/– கட்டணம் செலுத்துமாறு பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள். எனவே, மேற்படி தொகை ரூ.64320/ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகைக்கு நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.138 /2024/இ1**

**பொருள் எண்: 3**

இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் ஈப்பு வாகன எண்.TN 31 CE 8496, பழுது ஏற்பட்டுள்ளதை சரிபார்க்கும் பணிக்கு M/S சங்காலாயா மோட்டார்ஸ் , பாகூர் புதுச்சேரி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதில் பழுதுகளை சரிசெய்யப்பட்டது. அதற்கான கட்டண தொகை ரூ.13097/- செலுத்துமாறு மேற்படி நிறுவனத்தாரால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்படி பணியின் அவசர அவவசியத்தை கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.820 /2023/இ1**

**பொருள் எண்: 4**

இந்நகராட்சியின் பழைய பேருந்து நிலையத்தினை புதியதாக விரிவாக்கம் செய்ய அரசின் அனுமதியும், மான்யத் தொகையும் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு பேருந்து நிலையத்தில் இயங்கி வந்து அனைத்து கடைகள், இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் கட்டண கழிவறை மற்றும் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அனைத்தும் இடித்து அகற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது புதிய பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டு கடைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. ஏற்கனவே இருந்த பேருந்து நிலையக் கட்டிடத்தில் வாடகை செலுத்தி வந்த திரு.எம்.பார்த்திபன் அவருடன் சார்ந்த 19 நபர்கள் புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்படும் கடைகளில் கடையினை ஒதுக்கீடு செய்து தரக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடந்துள்ளதால் இவ்வழக்கு எண்.W.P.No.59/2024ல் நகராட்சி சார்பாக ஏற்று நடத்தி தர அரசு வழக்கறிஞர் திரு.பரணிதரன்.U. சென்னை அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.25.000/– வழங்க கோரியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நிர்வாக நலன் கருதி வழக்கு கட்டணத்தொகையினை நகர்மன்ற அனுமதி நிலையை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு தொகையினையும் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். /2023/**

**பொருள் எண்: 5**

இந்நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகன எண்.TN 31 CE 8412, பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு M/S சங்காலாயா மோட்டார்ஸ் , பாகூர் புதுச்சேரி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதில் பழுதுகளை சரிசெய்யப்பட்டது. அதற்கான கட்டண தொகை ரூ.16186/- செலுத்துமாறு மேற்படி நிறுவனத்தாரால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்படி பணியின் அவசர அவவசியத்தை கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.820 /2023/இ1

**பொருள் எண்: 6**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 23, சத்தியஞான சபை வளாகத்தில் கீலகமான சிதலமடைந்துள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு பதில்அதன் அருகில் 6வது மாநில நிதிக்குழு 2022–2023 திட்டத்தின் கீழ் ரூ.150.00/– இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக 4.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி , பம்புரூம் மற்றும் பகிர்மான குழாய் பதித்தல் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னைஅவர்களின் கடித ந.க.எண் 34832/2023/எம் எ 1, நாள்.08.02.2024ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** 1. மன்றம் பதிவுசெய்யலாம்.

**ந.க.எண்.10242023/இ1**

**பொருள் எண்: 7**

வடலூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் கட்ட மாவட்ட ஆட்சியர் கடலூர் அவர்களின் உள் நுழைவு அனுமதி வழங்கியது. வார்டு எண். 09 ராகவேந்திரா சிட்டி ஆபத்தாரணபுரத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட இடம் நீதி மன்ற கட்டிடம் கட்ட உள்ளதால் உள்நுழைவு அனுமதி தற்காலிகமாக நிறுத்திம் செய்யப்பட்டதன் காரணமாக பேருந்து நிலையத்தின் பின்புரம் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்ட மன்ற ஒப்பபுதல் பெறப்பட்டது. மேற்கண்ட பழைய கட்டிடத்தை இடித்து தற்பொது புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதனால், அலுவலக முன்புரம் மேடுபள்ளமாக சமபடு;த்த முடியாத நிலையில் உள்ளது. அலுவலக வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அப்பகுதியில் சிமெண்ட் கல் (பேவர் பிளாக்) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 18.00/– இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 111/2024/இ1)**

**பொருள் எண்: 8**

வடலூர் நகராட்சி புதிய அலுவலக கட்டடம் திறப்புவிழா மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் தலைமையில் வருகிற 02.03.2024 (சனிகிழமை) நாளன்று திறக்கப்பட உள்ளதை முன்னிட்டு கட்டடம் திறப்புவிழா அழைப்பிதழ் அச்சடிப்பு செய்யும் பணி, அலங்கார வளைவுகள்அமைக்கும் பணி, சாமியனார் பந்தல், டேபில், சேர், அமைக்கும் பணி, ட்ரோன் கேமரா மூலம் கண்காணிப்பு செய்தல், வீடியோ கிராப் புகைப்படம் எடுக்கும் பணி, மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், பிற அரசு துறை அதிகாரிகள், முக்கிய விருந்தினர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்கள் ஆகியோருக்கு உணவு ஏற்பாடு செய்யும் பணிகளுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/– நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 174/2024/இ1)**

**பொருள் எண்: 9**

வடலூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் முன்புரம் மேடுபள்ளமாக சமபடு;த்த முடியாத நிலையில் உள்ளது. அலுவலக வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அப்பகுதியில் சிமெண்ட்கல் (பேவர் பிளாக்) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 18.00/—இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 26.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன மன்றத்தின் பார்வைக்கும் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தநிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு. பரமசிவம் ஒப்பந்ததாரர்,சேலம். | (+) 3.82%மதிப்பீட்டைவிடஅதிகம் |
| 2 | M/S சாய் சக்கி அண்ட் கோ,சேலம் | (—) 0.01%மதிப்பீட்டைவிடகுறைவு |

அலுவலக குறிப்பு : 1. மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட (—) 0.01 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/S சாய் சக்கி அண்ட் கோ, சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசரஅவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4463 /2023/இ1)**

**பொருள் எண்: 10**

வடலூர் நகராட்சி வார்டு எண்.19, சேராக்குப்பம் சர்வே எண்.306/4ல் புதியதாக கட்டப்பப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டடத்திற்கு மும்முனை மின் இணைப்பு அமைத்துதர வேண்டுமாய் இவ்வலுவலக கடித ந.க.எண்1067/2023/இ1, நாள்.03.10.2023ல் இளமின் பொறியாளர் மின்சார வாரியம் வடலூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் ரூ77947/— கட்டணம் செலுத்துமாறு பட்டியல் சமர்பித்துள்ளார்கள். எனவே மேற்படி தொகை ரூ77947/— ஐ நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1, மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகைக்கு நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 204/2024/இ1)**

**பொருள் எண்: 11**

வடலூர் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் சுகாதாரபிரிவு ,பொறியியல் பிரிவு , நகரமைப்புபிரிவு மற்றும் வருவாய்பிரிவு எழுத்தர்களுக்கு போதுமான கணினிகள் இல்லாததால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் அவர்களிடமிருந்து கேட்கப்படும் தரவுகளுக்கு உடனடியாக பதில் அனுப்ப இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் அலுவலக அன்றாட தரவுகளை கணினியில் பதிவேற்றம் செய்ய காலதாமதம் ஏற்படுவதால் மேற்படி பிரிவு எழுத்தர்களுக்கு கணினி 05, மற்றும் பிரின்டர் 05 சப்ளை செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ 7.60/— இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 111/2024/இ1)**

**பொருள் எண்: 12**

வடலூர் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் சுகாதாரபிரிவு ,பொறியியல்பிரிவு , நகரமைப்பு பிரிவு மற்றும் வருவாய் பிரிவிற்கு கணினி 05, மற்றும் பிரின்டர் 05 சப்ளை செய்யும் பணிக்கு ரூ 7.60/— மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 26.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தநிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. ஏ.ஸ்டாலின்,ஒப்பந்ததாரர்,வடலூர் | (–) 0.37%மதிப்பீட்டைவிடகுறைவு |
| 2 | M/S ஜெகத் இண்டஸ்ரிஸ்,கோயம்புத்தூர் | (+) 2.22%மதிப்பீட்டைவிடஅதிகம் |

**அலுவலக குறிப்பு :** 1. மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிட(–) 0.37% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. ஏ.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்,
2. பணியின் அவசரஅவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்றுபணிஉத்தரவுவழங்கியதைமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4463 /2023/இ1)**

**பொருள் எண்: 13**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023–2024 திட்டத்தின் கீழ் ரூ.33.00/– இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 11, சென்னியப்பன் 2வது ரோடு, வார்டு எண்.22 ஜோதி நகர் மெயின் ரோடு, ஜோதி நகர் 1வது ரோடு, வார்டு எண்.09 ராகவேந்திரா சிட்டி 9வது ரோடு, வார்டு எண் 08 NLC EXT 6வது ரோடு ஆகிய சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் மறுசீரமைக்கும் பணிமேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடித ந.க.எண் 165/2021/ஆ1, நாள்.02.02.2024ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** 1. மன்றம் பதிவுசெய்யலாம்,

**ந.க.எண்.803/2023/இ1**

**பொருள் எண்: 14**

மாவட்ட ஆட்சித்தலைர் கடலூர் மாவட்டம் அவர்களின் அறிவுறையில் வடகிழக்கு பருவமழை 2023 போதிய மழை இல்லாத காரணத்தால் ஏற்படக்கூடிய குடிநீர் பற்றாக்குறை தொடர்பாக முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. எனவே, வடலூர் நகராட்சிக்குட்பட்ட 01 முதல் 27 வார்டுகளில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளின் ஆழ்துளை கிணற்றில் உள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிகளுக்கு மதிப்பீடு ரூ 6.00/– இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 111/2024/இ1)**

**பொருள் எண்: 15**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட 01 முதல் 27 வார்டுகளில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளின் ஆழ்துளை கிணற்றில் உள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணிகளுக்கு ரூ 6.00/– இலட்சம் மதிப்பீட்டில்பணிகள்மேற்கொள்ள 26.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

பணி ஆணை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும்

| வ. எண் | ஒப்பந்தநிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. ஏ.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் | (–) 0.94 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. வி.கச்சையப்பன், ஒப்பந்ததாரர், வடலூர் | (+) 2.33% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :** 1. மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட (–) 3.94 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கி திரு. ஏ.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்,
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4463 /2023/இ1)**

**பொருள் எண்: 16**

இந்நகராட்சி இரண்டாம் நிலை, நகராட்சிக்கு தட்டச்சர் பணி – 1, (அரசாணை நிலை எண்.10) நாள்.23.01.2023 பணியிடம் காலியிடமாக உள்ளதால் சுயஉதவிக்குழு மூலம் 1 தட்டச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் 2023 – 2024ன்படி பணிபுரிந்து வருகின்றனர். ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை தொடர்ந்து வள்ளலார் சுயஉதவிக்குழு மூலம் 1 தட்டச்சர் பணியமர்த்தி அலுவலக பணி தொய்வு ஏற்படாவண்ணம் பணிமேற்கொள்ள அதற்கான தோராய செலவினம் ரூ.2.50/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.243/2023/சி1**

**பொருள் எண்: 17**

வடலூர் நகராட்சிக்கு எதிராக திருமதி.மரகதவள்ளி என்பவர் தனது சொத்து பிரச்சனை காரணமாக குறிஞ்சிப்பாடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.56/2023ல் நகராட்சி ஆணையாளர் அவர்களை சேர்ந்துள்ள படியால் இந்நகராட்சியின் சார்பில் எதிர்வாதுரை செய்து வழக்காடவும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/–ஐ அரசு வழக்கறிஞர் திரு. D.கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கிடவும் கோரி பட்டியல் தொகை சமர்ப்பித்துள்ளார். எனவே, மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 47 /2024/எப்1)**

**பொருள் எண்: 18**

வடலூர் நகராட்சி வார்டு எண்.02, ஆபத்தாரணபுரம் அம்மன் கோயில் தெரு பகுதியில் உள்ள கன்னியாகோவில் செல்லும் சாலையின் மேற்குபுரம் மழைநீர் வடி கால்வாய் கட்டுமான பணியில் கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள மின்கம்பத்தினை இடம் மாற்றி அமைக்க இவ்வலுவலக கடித ந.க.எண்137/2022/இ1, நாள்.07.02.2024ல் இளமின் பொறியாளர். மின்சாரவாரியம், வடலூர், அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் ரூ16706/– கட்டணம் செலுத்துமாறு பட்டியல் சமர்பித்துள்ளார்கள். எனவே, மேற்படி தொகை ரூ16706/– ஐ நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு.

அலுவலக குறிப்பு : 1, மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகைக்கு நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 137/2022/இ1)**

**பொருள் எண்: 19**

வடலூர் நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகளில் உள்ள சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குப்பைவரி மற்றும் வரியில்லா இனங்களுக்கு வார்டுகளில் உள்ள அனைத்து தெருக்களிலும் வசூல் பணியில் 100 % இலக்கு அடைய, கற்பகம் சவுண்ட் சிஸ்டம் மற்றும் வாடகை பாத்திரம் நிலையம் மூலம் ஆட்டோவில் விளம்பரம் செய்யப்பட்டது. இதன் காரணமாக 16.02.2024யில் இருந்து 06.03.2024 வரை ஆட்டோவில் விளம்பரம் செய்யப்பட்ட நாளுக்கு தொகை ரூ.48000/– மட்டும் கற்பகம் சவுண்ட் சிஸ்டம் மற்றும் வாடகை பாத்திர நிலையத்திற்கு வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1, மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2024/பி1)**

**பொருள் எண்: 20**

வடலூர் நகராட்சி பாராளுமன்ற தேர்தல் 2024 முன்னிட்டு நகராட்சிக்குபட்ட வாக்கு சாவடி மையங்களுக்கு சாமியானார் பந்தல், டேபிள் , சேர் மாற்று திறனாளிகள் வாக்கிளிக்க ஏதுவாக சாய்வுத்தளம் அமைத்தல், பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் பணிகளுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/– நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1, மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.184/2024/இ1)**

**பொருள் எண்: 21**

வடலூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு 2024– 2025ம் ஆண்டிற்கு தேவையான பொருட்களான எழுதுபொருட்கள், பதிவேடுகள், படிவங்கள், வாங்கி வழங்குவதற்கும் “தமிழ்நாடு மல்டி பர்பஸ் இண்டிகோ சர்வ்” திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்தில் வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.3.50,000/- மட்டும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1, மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். /2024/சி1)**

**பொருள் எண்: 22**

வடலூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் , புதிய அலுவலக கட்டிடம் , KNMT மற்றும் NSMT சாலை பணிகள் மூலதன மானிய நிதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் 15th CFC யில் BPHC, PHC மற்றும் HSC கட்டடம் கட்டும் பணி ஆகிய திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளை கண்காணிக்கவும் மற்றும் புதிய திட்டப்பணிகளுக்கு கருத்துரு (DPR) தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் செங்கல்பட்டு மண்டல அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னை சென்று உரிய அனுமதி பெருதல், அன்றாடம் கேட்கப்படும் தரவுகள் அனுப்புதல் போன்று பணிகளை மேற்கொள்ள இரண்டாம் நிலை நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணி அமைப்பின்படி ஒருவரைவாளர் மற்றும் இரண்டு பணி ஆய்வர் பணியிடங்கள் காலியாக உள்ளிதால் மேற்படி பணிகளை உரிய காலத்தில் செய்ய சிரமம் ஏற்படுகிறது. எனவே, தொழில்நுட்ப உதவியாளர்கள் வெளிகொணர்வு முகமை மூலம் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1, மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.4463/2024/இ1)**

**பொருள் எண்: 23**

வடலூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் , புதிய அலுவலக கட்டிடம் , KNMT மற்றும் NSMT சாலை பணிகள் மூலதன மானிய நிதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் 15th CFC யில் BPHC, PHC மற்றும் HSC கட்டடம் கட்டும் பணி ஆகிய திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளை கண்காணிக்கவும் மற்றும் புதிய திட்டப்பணிகளுக்கு கருத்துரு (DPR) தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் செங்கல்பட்டு மண்டல அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னை சென்று உரிய அனுமதி பெருதல், அன்றாடம் கேட்கப்படும் தரவுகள் அனுப்புதல் போன்று பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று 19.01.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | A.Stallin,Vadalur | (–) 0.52 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/S Devi Construction Cuddalore | (+) 2.67% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :** 1. மேற்படி, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர் வடலூர் அவர்கள் மதிப்பீட்டை விட 0.52% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4463/2024/இ1)**

**பொருள் எண்: 24**

வடலூர் நகராட்சிகுட்பட்ட வார்டு எண்.20, TS No 33 அய்யன் ஏரி புனரமைக்கும் பணி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023 – 2024 திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.03.2023ல் அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி, பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் பிரசுரமாகும் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்ய வேண்டி இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் அலுவலர், தலைமைச்செயலகம் சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.779/2023/இ1, நாள்.11.01.2024ல் கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து 18.01.2024 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான கட்டண தொகை ரூ.72727/– செலுத்துமாறு M/S MOULIS சென்னை நிறுவனத்தாரால் பட்டியல் சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.72727/– நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி M/S MOULIS சென்னை நிறுவனத்தாருக்கு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று காசோலை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.773/2023/இ1.

**பொருள் எண்: 25**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்.101/5ல் நகராட்சி பொது மயான இடத்தின் அருகில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023 – 24ன் கீழ் நவின எரிவாயு தகன மேடை அமைக்குமூ பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட இடம் சாலை மட்டத்திலிருந்து சுமார் 6 அடி பள்ளமாக உள்ளது. மேலும், அய்யன் ஏரியின் உபரிநீரால் மேற்கண்ட பணி மேற்கொள்ளும் இடத்தின் தென்மேற்கு பகுதியில் சுமார் 10 அடி ஆழத்திற்கு மண் அரிமானம் ஏற்பட்டுள்ளது. மேலும் நவின தகன மேடை கட்டடத்தின் கழிவறை கட்டடம் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடம் மேற்கண்ட பகுதியில் அமைக்க வேண்டி உள்ளதால் பாதுகாப்பு காரணமாக தடுப்புகள் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, பணியின் அவசர அவசியத்தை கருதி அப்பகுதியில் தடுப்புச்சுவர்கள் அமைக்க தாயரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80/– இலட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுறது.

**அலுவலக குறிப்பு :** 1, மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4463/2024/இ1)**

**பொருள் எண்: 26**

இந்நகராட்சியின் நகர்மன்றத்தலைவர் ஈப்பு வாகன எண்.TN31CE8496 ஆணையாளர் ஈப்பு வாகன எண்.TN31CE8476 நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகன எண். TN31CE8412 ஆகிய ஈப்பு வாகனங்களின் பராமரிப்பு பணியான தகுதிசான்று பெறுதல் , சாலைவரி , சேவைவரி, பசுமைவரி, வாகன ஆயுள் காப்பீடு மற்றும் மாதந்திர பயன்பாட்டிற்கு எரிபொருள் வாங்குதல் மற்றும் 62KVA ஜெனரேட்டர் பயன்பாட்டுக்கு எரிபொருள் வாங்குதல் போன்ற பணிகளுக்கு 2024 – 2025 ஆம் ஆண்டிற்கு ஆகும் தோராய செலவின தொகை ரூ.10.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1, மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.4463/2024/இ1)**

**பொருள் எண்: 27**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பின் நீட்சியாக அன்றாடம் அரசு துறைகளை அணுகும் பொது மக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும், செம்மை படுத்தி சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் சென்று கோரும் வண்ணம் மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்டம் 2023 – 2024ன் கீழ் நகராட்சி சேவைகள் மற்றும் பிற அரசு துறைகளை ஒருங்கிணைத்து ஒவ்வொரு நகராட்சியிலும் குறிப்பிட்ட இடங்களில் சிறப்பு முகாம் அமைக்கும் பணிக்கு இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 01 முதல் 27 வார்டுகளுக்கும் மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்டம் குறித்து பொது மக்கள் அறியும் வகையில் விளம்பர டிஜிட்டல் பேனர் (10 x20 அளவு) 27 எண்ணிக்கையில் அச்சடிப்பு செய்யும் பணி, முகாமில் பங்கேற்கும் பிற துறை வாரியாக டிஜிட்டல் பேனர் (3x4 அளவு) 14 எண்ணிக்கையில் அச்சடிப்பு செய்யும் பணிக்கு 07.12.2023ல்

விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | சூர்யா பிரஸ்,188, ராகவேந்திரா சிட்டி, வடலூர். | 128256/– |
| 2. | கிருஷ்ணா பிரண்டர்ஸ் பண்ருட்டி ரோடு, வடலூர். | 145840/– |
| 3. | லட்சுமி பிரஸ்,<br>நெய்வேலி மெயின் ரோடு,<br>வடலூர். | 142840/– |

அலுவலக குறிப்பு : 1. மேற்படி பணிக்கு வரிசை எண்.1ல் உள்ள சூர்யா பிரஸ், வடலூர் நிறுவனம் மற்ற நிறுவனத்தை விட குறைவாக விலைப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4463/2024/இ1)**

**பொருள் எண்: 28**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னெடுப்பின் நீட்சியாக அன்றாடம் அரசு துறைகளை அணுகும் பொது மக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும், செம்மைபடுத்தி சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் சென்று கோரும் வண்ணம் மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்டம் 2023 – 24ன் கீழ் நகராட்சி சேவைகள் மற்றும் பிற அரசு துறைகளை ஒருங்கிணைத்து ஒவ்வொரு நகராட்சியிலும் குறிப்பிட்ட இடங்களில் சிறப்பு முகாம் அமைத்து பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை கணினியில் மக்களுடன் முதல்வர் மற்றும் முதல்வரின் முகவரி டேட்டா ஆப் மூலமாக பதிவேற்றம் செய்யும் பணிக்கு இணையவழி சேவை வழங்க 07.12.2023 விலைப்புள்ளி கோரப்ட்டதில் கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | அல்ட்ரா மேக்ஸ் நெட்வொர்க்,<br>பிரைவேட் லிமிடேட், பண்ருட்டி | 49000/– |
| 2. | எய்ம்ஸ் நெட் கேப் டூர்ஸ் & டிராவல்ஸ், பண்ருட்டி., | 47200/– |
| 3. | SVB பிராட் பேண்ட் சேவை, வடக்கு குறுக்குத் தெரு, சேராக்குப்பம், வடலூர். | 51000/– |

அலுவலக குறிப்பு : 1. மேற்படி பணிக்கு வரிசை எண்.2ல் உள்ள எய்ம்ஸ் நெட் கேப் டூர்ஸ் &டிவால்ஸ் பண்ருட்டி நிறுவனம் மற்ற நிறுவனத்தை விட குறைவாக விலைப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு
வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4466/2024/இ1)**

நகர்மன்ற தலைவர்
வடலூர் நகராட்சி

## மன்றபொருள்

வடலூர் நகராட்சியில் ஆணையாளர் வாகன ஓட்டுநர், பொறியியாளர் வாகன ஓட்டுநர் மற்றும் Data Entry Operator 1 ஆகியவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் தொகை வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். மேற்கண்ட பணிக்கு பணியாளர்கள் தேவைப்படுவதால் 2024 – 2025ம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அவ்வப்போது மாற்றிவரப்பெறும் தினக்கூலி அடிப்படையில் வழங்கிட தோராய செலவினம் ரூ.10.00(பத்து லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட ஓட்டுநர்கள் மற்றும் Data Entry Operator அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அவ்வப்போது மாற்றிவரப்பெறும் தினக்கூலி அடிப்படையில் வழங்கவும் இந்நகராட்சி பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண்.243/2024/சி1)**

| | |
|---|---|
| ஆணையாளர் | நகர்மன்ற தலைவர் |
| வடலூர் நகராட்சி | வடலூர் நகராட்சி |

**2024 – ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற வடலூர் நகராட்சி நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை:** **திரு. சு. சிவக்குமார்,**
**நகர்மன்றதலைவர்,**
**வடலூர் நகராட்சி.**

**பொருள் எண்: 26**

இந்நகராட்சியின் நகர்மன்றத்தலைவர் ஈப்பு வாகன எண்.TN31CE8496 ஆணையாளர் ஈப்பு வாகன எண்.TN31CE8476 நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகன எண். TN31CE8412 ஆகிய ஈப்பு வாகனங்களின் பராமரிப்பு பணியான தகுதிசான்று பெறுதல் , சாலைவரி , சேவைவரி, பசுமைவரி, வாகன ஆயுள் காப்பீடு மற்றும் மாதந்திர பயன்பாட்டிற்கு எரிபொருள் வாங்குதல் மற்றும் 62KVA ஜெனரேட்டர் பயன்பாட்டுக்கு எரிபொருள் வாங்குதல் போன்ற பணிகளுக்கு 2024 – 2025 ஆம் ஆண்டிற்கு ஆகும் தோராய செலவின தொகை ரூ.10.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1, மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.4463/2024/இ1)**

**தீர்மானம் எண். 513, அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) திரு. சு. சிவக்குமார்,**
**நகர்மன்றதலைவர்,**
**வடலூர் நகராட்சி.**

//உண்மை நகல்//

ஆணையாளர்
வடலூர் நகராட்சி

# <u>வடலூர் நகராட்சி</u>

## ***<u>மன்றக் கூட்ட அழைப்பிதழ்</u>***

*************

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 12.03.2024.செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி.